


# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-02 Tel&Fax- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் – 11

# வட பகுதியில் அரச பதவிகளில் பெரும்பான்மை இனத்தவர்கள் - அரசு கூறும் செய்தி என்ன?



வடமாகாணத்தில் அண்மைக்காலங்களாக அரச உயர் பதவிகளுக்கு பெரும்பான்மை இனத்தவர்களை நியமிப்பது சர்வ சாதாரண விடயமாக மாறியுள்ளது. இது ஓர் கவலைக்குரிய விடயமாகும்.

குறிப்பாக வவுனியா மாவட்டம், யாழ்ப்பாண மாவட்டம் ஆகிய இடங்களில் அரச பதவிகளுக்கு நாட்டின் பெரும்பான்மையினர் நியமிக்கப்பட்டு வருகின்றனர். தமிழர் பிரதேசங்களில்...

(03 ஆம் பக்கம் பார்க்க...)

# விவசாயிகளின் வயிற்றில் அடித்த அரசு, நெற்பயிர்ச்செய்கையை கைவிடும் அபாயம்

இலங்கை ஒரு விவசாய நாடு. இலங்கையில் மூவின மக்களும் எவ்வித பாகுபாடுமின்றி விவசாயத்தை ஒரு தொழிலாகக் கருதி, பரம்பரை பரம்பரையாக நெல் உற்பத்தியை மேற்கொண்டு வருகின்றனர். இந்நாட்டின் உணவுத் தேவைக்கு இவர்களின் பங்களிப்பு இன்றியமையாதது. வருடாவருடம் மூன்று போகங்களும் குளத்தை நம்பி அல்லது மழையை எதிர்பார்த்து இந்நாட்டில் நெல் பயிரிடப்படுகிறது. இந்நாட்டின் தேசிய உணவாக இருப்பதும் அரிசிதான்.... (03ஆம் பக்கம் பார்க்க...)



# கிழக்கு மாகாண வருடாந்த ஆசிரியர் இடமாற்றத்தை உடன் அமுல்படுத்துக!

## கிழக்கு ஆளுநரிடம் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கோரிக்கை



கிழக்கு மாகாண ஆசிரியர்களின் வருடாந்த இடமாற்றம் கடந்த 2 வருடங்களாக அமுல்படுத்தப்படாமல் உள்ளது. இதனால் பல ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே இந்த இடமாற்றத்தை உடன் அமுல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமெனத் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யகம்பத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார். (03 ஆம் பக்கம் பார்க்க...)

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல : 154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## தமிழ்ப் பிரதிநிதிகளுடன் பேசுவதற்குக் கூட தயார் நிலையில் அரசு இல்லை

இந்நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவதுதான் தமிழ் மக்களின் எதிர்காலம் சிறப்பாக அமைவதற்கான ஒரே வழி. அதற்காகத் தான் தமிழினம் இன்றும் வீதிகளில் இறங்கிப் போராடிக் கொண்டிருக்கிறது. அன்றும் ஆயுதம் ஏந்திப் போராடும் நிலைக்குத் தள்ளப்பட்டது. இந்நாட்டில் தொடர்ந்தும் அரசின் ஒடுக்குமுறைகள் அதிகரித்தவண்ணம் உள்ளதே தவிர. இன்னமும் முற்றுப்புள்ளி வைக்கப்படவில்லை.

ஆட்சியாளர்கள் மாற்றம் பெறுகிறார்களே தவிர. நிகழ்ச்சி நிரலில் மாற்றம் ஏதும் ஏற்படவில்லை. இந்நாட்டில் வாழும் சிறுபான்மை இனங்களை அடக்கியாளும் கைங்கரியத்தை அன்றிலிருந்து இன்றுவரை நேரடியாகவும். மறைமுகமாக கைக்கூலிகளை வைத்தும் அவ்வப்போது ஆட்சிக்கு வந்த அரசுகள் செயற்படுத்தியே வருகின்றன.

சிறுபான்மைச் சமூகம் எதிர்கொள்ளும் இன்னல்களுக்குத் தீர்வு என்ன என்பது குறித்துப் பேச சிங்கள ஆட்சியாளர்கள் தயாராக மாட்டார்கள். ஏனெனில் திட்டமிட்டுச் செய்தவர்களே அவர்களெனில் எப்படி பேச்சு வார்த்தைக்கு வருவார்கள்.

எதிர்பார்த்தது போலவே தற்போதைய ஆட்சியாளரும் தமிழினத்தைப் புறக்கணித்தே வருகிறார். தாம் நினைத்தது போல செயற்பாடுகள் இந்நாட்டில் அரங்கேற்றப்பட்டு வருகின்றன.

வடகிழக்கு எங்கும் பௌத்த மயமாக்கலை தீவிரப்படுத்தியிருக்கும் இவர்கள். தமிழ் மக்களை தமது தாயகப் பிரதேசங்களில் நிம்மதியாக வாழவிடாமல் எப்போதும் பிரச்சினைகளை ஏற்படுத்தும் நோக்கில் செயற்பட்டும் வருகின்றனர். தமிழ் மக்கள் இன்றும் சுதந்திரமாக வாழ முடியாமல் மன உளைச்சல்களை சுமந்தபடி நடைபிணங்களாக அலையும் நிலைதான் தொடர்கின்றது. சர்வதேசமும் கைவிட்டவர்களாக இந்நாட்டைவிட்டு தப்பியோடுவதை விட வேறு வழியில்லை என்கிற நிலைக்குத் தமிழினம் தள்ளப்பட்டுள்ளது.

## பதவியேற்கிறார் அஜித் நிவாட் கப்ரால்

*நாளைய தினம் (15 ஆம் திகதி) முதல் அமுலாகும் வகையில் அஜித் நிவாட் கப்ரால் இலங்கை மத்திய வங்கியின் புதிய ஆளுநராக, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.*

*அதற்கமைய, நாளை (15) அஜித் நிவாட் கப்ரால் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக கடமைகளை பொறுப்பேற்கவுள்ளார் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*சிரேஷ்ட பட்டய கணக்காளரான இவர், இதற்கு முன்னதாக அமைச்சின் செயலாளராகவும் கடமையாற்றியுள்ளதுடன் சுமார் 9 வருடங்கள் மத்திய வங்கியின் ஆளுநராகவும் பதவி வகித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.*

*தற்போது, மத்திய வங்கியின் ஆளுநராகவுள்ள பேராசிரியர் **W.D.** லக்ஷ்மன் இன்றுடன் பதவி விலகவுள்ள நிலையில், நாளைய தினம் புதிய ஆளுநராக அஜித் நிவாட் கப்ரால் செயற்படவுள்ளார்.*



**நாட்டில் மேலும் 135 கொவிட் மரணங்கள் நேற்று (13.09.2021) பதிவாகியுள்ளன. இதற்கமைய நாட்டில் பதிவாகியுள்ள கொவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 11,431 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் நேற்று 2560 பேருக்கு கொவிட் தொற்று உறுதியாகியுள்ளது. இதற்கமைய இதுவரை அடையாளம் காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 488,482 ஆக அதிகரித்துள்ளது.**

## ஐ.நாவில் இலங்கை தொடர்ந்தும் கண்காணிப்பில் – ஆணையாளர் மிச்செல்



அரசாங்கத்தினால் அண்மையில் நிறைவேற்றப்பட்ட அவசரகால சட்ட விதிமுறைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை கண்காணித்து வருவதாக அதன் ஆணையாளர் மிச்செல் பெச்லெட் தெரிவித்துள்ளார். ஜெனிவா நகரில் ஆரம்பமான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 48வது கூட்டத்தொடரில். இலங்கை தொடர்பிலான வாய்மூல அறிக்கையினை சமர்ப்பித்து உரையாற்றும் போதே. அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பில் தமது இறுதி அறிக்கையை அடை யாளம் காணப்பட்ட முக்கியத்துவம் மற்றும் பிரச்சினை தொடர்பில். மனித உரிமை பேரவையில் தெளிவுப்படுத்த விருப்பம் கொண்டுள்ளேன். இதற்கான தயார் நிலைகளுக்காக இலங்கை அரசாங்கமும் தமக்கு தகவல் வழங்கியுள்ளது. கடந்த ஜூன் மாதம் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கும் ஐக்கிய நாடுகளுடன் இணைந்து செயற்படுவதற்கும் இணைந்து செயற்படுவதற்குமான அர்ப்பணிப்பை வழங்குவதாக இலங்கை ஜனாதிபதி தெரிவித்திருந்தார். இதற்கான உரிய மீளமைப்பு வேலைகளை முன்னெடுப்பதாகவும். ஜனாதிபதி உறுதியளித்திருந்தார். இலங்கை தற்போது முகங்கொடுக்கும் சமூக. பொருளாதார மற்றும் அரசாங்கத்தை நடத்தி செல்வதற்கான சவால்களுக்கு. இராணுவ மயமாக்கலை பொறுப்பற்ற வகையில் முன்னெடுக்கின்றமையே காரணமாகிறது.

உணவு பாதுகாப்பு மற்றும் விலையை கட்டுப்படுத்தும் நோக்கில் ஆகஸ்ட் 30ஆம் திகதி இலங்கையில் புதிய அவசர கால விதிமுறைகள் அமுல்படுத்தப்படுத்தப்பட்டன. அதிலும் இராணுவத்தினர் பணிகள் மேலோங்கியுள்ளன. அது தொடர்பில் தொடர்ந்தும் கண்காணித்து வருவதாக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சல் பெச்லெட் தெரிவித்துள்ளார்.

## கிழக்கு மாகாண வருடாந்த...

ஆளுநருக்கு அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, கிழக்கு மாகாணத்தில் விண்ணப்பம் கோரப்பட்ட இவ்வாண்டுக்கான வருடாந்த ஆசிரியர் இடமாற்றம் இதுவரை இடம்பெறவில்லை. இதனால் பல ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டுள்ளமையை தங்களது மேலான கவனத்துக்குக்கொண்டு வர விரும்புகிறேன்.

கிழக்கு மாகாணத்தில் ஏனைய அரச உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்றம் முறையாக ஒவ்வொரு வருடமும் இடம்பெற்று வந்த போதிலும் ஆசிரியர் இடமாற்றம் கடந்த 2 வருடங்களாக இடம்பெறவில்லை என ஆசிரியர் சமூகம் கவலை வெளியிட்டுள்ளது. இவ்வாண்டுக்கான வருடாந்த ஆசிரியர் இடமாற்றப் பட்டியல் வெளியிடப்பட்டு 2021.04.19ஆம் திகதி முதல் அது நடைமுறைக்கு வரும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. பின்னர் மே மாதம் அமுலுக்கு வரும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

அதன் பின்னர் ஜூன் மாதம் அமுலுக்கு வரும் எனச் சொல்லப்பட்டுள்ளது. எனினும், இந்த இடமாற்றம் இதுவரை அமுல்படுத்தப்படவில்லை. இதனால் பல ஆசிரியர்கள் நீண்ட காலமாக கஷ்டப்பிரதேசப் பாடசாலைகளில் கடமையாற்றி வருகின்றனர். எதிர்பார்த்திருந்த இடமாற்றம் இதுவரை கிடைக்காததால் அவர்கள் மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளனர். தங்களது நிர்வாக காலத்தில் வருடாந்த ஆசிரியர் இடமாற்றத்தில் இவ்வாறான தாமதங்கள் இடம்பெறுவது குறித்து நான் மிகவும் கவலையடைகின்றேன். எனவே, இதுவிடயத்தைக் கவனத்தில் எடுத்து இவ்வாண்டுக்கான வருடாந்த ஆசிரியர் இடமாற்றத்தை உடன் அமுலுக்குக் கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கடிதத்தின் பிரதிகள் கிழக்கு மாகாண கல்வி அமைச்சு செயலாளர், கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

## விவசாயிகளின் வயிற்றில்...

நெற் பயிர்செய்கைக்கு தேவையான உரங்கள் நெற் பயிர்ச்செய்கையாளர்களுக்கு மாத்திரம் மானிய விலையில் வழங்கப்பட்டு வந்த போதும், வழங்கப்படும் உரம் தமக்குப் போதாது என்ற குற்றச்சாட்டு இருந்து வந்தது. எமது நாட்டின் உரத் தேவைகள் இதுவரை காலமும் இறக்குமதியே செய்யப்பட்டு வந்தன. இன்று உர இறக்குமதிக்கான தடையின் மூலமாக விவசாயத் தொழில் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதுடன், நெற் பயிர்ச்செய்கையை விவசாயிகள் கைவிடும் அளவிற்கு நிலைமை மோசமாகியுள்ளது.

அதேவேளை, இரசாயன உரம் மற்றும் மருந்துகளுக்கே எமது நாட்டிலுள்ள விளைச்சல் நிலம் பல தசாப்தங்களாக பழக்கப்பட்டுள்ளது. இவற்றை பயன்படுத்துவதால்தான் சிறந்த விளைச்சல் கிடைக்கும் என்ற நிலை காணப்படுகின்றது. குறிப்பாக தேயிலை உற்பத்திக்கு ஆரம்பம் முதலே இரசாயன உரமும், மருந்தும்தான் பயன்படுத்தப்பட்டுள்ளன. எனவே, அத்துறையில் உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமானால் இரசாயன உரம் அவசியமென உற்பத்தியாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். அவ்வாறு இல்லாவிட்டால் அடுத்தாண்டில் தேயிலை உற்பத்தி 50 சதவீதத்தால் குறைவடையும் எனவும் கூறப்படுகிறது. இறுதியில் விளைச்சல் குறைவு, போதிய கையிருப்பு இல்லை என அனைத்துப் பொருட்களையும் மீண்டும் இறக்குமதி செய்யும் நிலைக்கு நாடு தள்ளப்படப்போகிறது.

சேதனப் பசளைகளை விவசாய நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தலாம். ஆனால் அதனை உடனடியாகச் செய்ய முடியாது. அதற்கென ஒரு காலவரையறை செய்யப்பட்டு உரிய திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்க வேண்டும். விவசாயிகளுக்கும் அனுபவம் வேண்டும். மண் பழக்கப்படவேண்டும். அரசு கூறுவது போல் இலங்கையில் போதுமானளவு சேதனப் பசளை உற்பத்தி செய்யப்படுவதுமில்லை. இதோ நெற் பயிர்ச்செய்கைக்கான காலம் நெருங்கிவிட்டது. கிராமங்களில் சேதனப் பசளைகளை உற்பத்தி செய்வதற்கான அரசின் வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதா? உள்நாட்டில் உரத் தயாரிப்புக்குத் தேவையான மூலப்பொருட்கள் இருக்கிறது. அவற்றைக் கண்டறிந்து நாட்டிற்குத் தேவையான உரத்தை உற்பத்தி செய்யலாம். எனினும் அரசு கூறுவதுபோல் உடனடியான மாற்றங்களை மண்ணில் ஏற்படுத்துவதும், மரபணு விதை இனங்களை மாற்றியமைப்பதும் சாத்தியமா? என்கிற கேள்வி எழுகிறது. ஆகவே நாம் மெல்லனவே நகர முடியும்.

## வட பகுதியில் அரச பதவிகளில்...

அதிகாரம் மிக்க பதவிகளில் நியமிக்கப்படுகின்றனர்.வவுனியா அரச அதிபராக கடந்த இரண்டு முறை பெரும்பான்மை இனத்தவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் வவுனியா மாவட்ட முன்னாள் அரச அதிபர் சமன் பந்துலசேனா அவர்கள் வட மாகாண அரச அதிபர்களுக்கு மேலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன் வவுனியா மாவட்டத்துக்கு தற்பொழுதுள்ள அரச அதிபராக பெரும்பான்மை இனத்தவர் உள்ளார். இந்நிலையில் வட பிராந்திய போக்குவரத்து சபையின் (பொறியியல் பகுதி) முகாமையாளராக அனுராதபுரத்தை சேர்ந்த பெரும்பான்மை இனத்தவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் இப்பதவிக்கு கிளிநொச்சி இ.போ.சபை சாலையின் பொறியியல் பகுதி முகாமையாளர் நேர்முக தேர்வில் சித்தியடைந்ததுடன் ஏழு வருடங்கள் கிளிநொச்சியில் முகாமையாளராக உள்ள நிலையிலும் அவருக்கு பதவி மறுக்கப்பட்டுள்ளது. அதே போல் யாழ் கோண்டாவில் சாலையில் பணிபுரியும் பொறியியல் முகாமையாளருக்கு தகுதியிருந்தும், அவருக்கு வடமாகாண முகாமையாளர் பதவி மறுக்கப்பட்டுள்ளது. இங்கு சுட்டிக்காட்டத்தக்க விடயம் யாதெனில் பெரும்பான்மை இனத்தவரை பதவியில் அமர்த்துவதை குற்றம் சொல்லவில்லை. மொழி ரீதியாகவும் தகுதி இருந்தும் தமிழர் பிரதேசத்தில் தமிழர்கள் புறக்கணிக்கப்படுவது ஏன் என்பது தான் இங்குள்ள கேள்வி?.

கிழக்கு மாகாணத்தில் பெரும்பான்மை இனத்தவர்களும் முஸ்லீம் இனத்தவர்களும் உயர் பதவிகளில் உள்ள நிலையில், இங்கு அரச உயர் பதவிகளில் பெரும்பான்மை இனத்தவர்கள் நியமிக்கப்படுவதானது, முற்றுமுழுதாக தமிழர்களை தமது பாரம்பரிய நிலத்தில் இருந்து ஓரங்கட்டும் நிகழ்ச்சியாகவும், எதிர்காலத்தில் தமிழர்களின் இருப்பை கேள்விக்குறியாக்கும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. அரசானது மாற்றான் பிள்ளையைப் போல் எண்ணாது தமிழர்களுக்கான தகுதி அடிப்படையில் அரச பதவிகளில் இடம் ஒதுக்க வேண்டும் என்பதுடன், தமிழர்களின் அரசியல் காவலர்கள் என்று சொல்லிக்கொள்ளும் அனைத்து தமிழ் அரசியல் தலைமைகளும் இதற்கு உறுதியான தீர்வை பெற முயல வேண்டும் என்பதுடன், எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறாத வண்ணம் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்பதே தமிழ் மக்களின் வேண்டுகோள் ஆகும்.

## தபால் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டன

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமைக்கு மத்தியில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக தபால் மா அதிபர் அறிக்கை ஒன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளார்.

தபால் சேவையை அத்தியாவசிய சேவையாக அரசாங்கம் பிரகடனப்படுத்தியுள்ள நிலையில். வாரத்தில் ஆறு நாட்களுக்கு பணி நிமித்தம் அலுவலகங்களை திறக்க கடந்த தினம் தீர்மானிக்கப்பட்டது.

இருப்பினும். கடுமையான போக்குவரத்து சிரமங்கள் இருப்பதால். அந்த நிலையை பராமரித்துச் செல்ல கடுமையான தடைகள் ஏற்பட்டுள்ளன.

அதன்படி. தொழிற்சங்கங்கள் மற்றும் அதிகாரிகளின் உடன்பாட்டுடன். புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் இரண்டு நாட்களுக்கு அலுவலகங்களை மூடவும். வாரத்தில் 4 நாட்கள் மட்டுமே தபால் சேவைகளை மேற்கொள்ளவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவின் காலப்பகுதியில். சுமார் 500 ஊழியர்கள் கொரோனாவினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதன் விளைவாக சுமார் 50 அலுவலகங்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளன. முதியோர் கொடுப்பனவுகள் உள்ளிட்ட கொடுப்பனவுகள் 17 மற்றும் 18 ஆம் திகதிகளில் வழங்கப்படும்.



# பட்டம் வென்றார் மெத்வதேவ்



நியூயோர்க்கில் நடந்த அமெரிக்க ஓபன் டென்னிஸ் இறுதிப் போட்டியில் ரஷ்ய வீரர் மெத்வதேவ் பட்டம் வென்றுள்ளார்.

இவருக்கு எதிராக விளையாடிய உலகின் நம்பர் வன் வீரர் செர்பியாவைச் சேர்ந்த ஜோகோவிச்சை 6-4,6-4,6-4 என்ற நேர்செட் கணக்கில் வீழ்த்தினார். பட்டம் வென்றுள்ள வீரர் மெத்வதேவ் முதன் முறையாக கிராண்ட்ஸ்லாம் பட்டமும் வென்றுள்ளார். மெத்வதேவ் பெற்றுள்ள வெற்றியால் 34 வயதான ஜோகோவிச்சின் கலண்டர் ஸ்லாம் முயற்சிக்கு முற்றுப் புள்ளி வைத்துள்ளார்.

# மீண்டும் ஏவுகணை சோதனையில் வடகொரியா

அமெரிக்காவுக்கும் வடகொரியாவுக்கும் இடையே நீண்ட காலமாக மோதல் போக்கு நிலவிவரும் நிலையில் வடகொரியா நேற்று தொலைதூர இலக்கை தாக்கி அழிக்கக்கூடிய ஏவுகணை சோதனையில் ஈடுபட்டுள்ளது.

அமெரிக்கா மீதான மோதலை அதிகரிக்கும் வகையில் வடகொரியா அவ்வப்போது ஏவுகணை சோதனையில் ஈடுபட்டு வருவதுடன் அணு ஆயுத வல்லமை கொண்ட வடகொரியா தங்கள் ஆயுத பலத்தை உலக நாடுகளுக்கு வெளிப்படுத்தி வருகிறது. இந்நிலையில். புதிதாக உருவாக்கிய ஏவுகணையை வடகொரியா வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது. தொலைதூர இலக்கை துல்லியமாக தாக்கி அழிக்கும் வல்லமை கொண்டதாக இந்த ஏவுகணை உள்ளது. 1.500 கிலோமீட்டர் தொலைவில் அமைக்கப்பட்டிருந்த இலக்கை ஏவுகணை துல்லியமாக தாக்கி அழித்ததாக வடகொரியா தெரிவித்துள்ளது.

எனினும் வடகொரியா சோதனை செய்த இந்த ஏவுகணை அணு ஆயுதத்தை சுமந்து செல்லும் வல்லமை கொண்டதா? என்பது குறித்த தகவல் வெளியாகவில்லை. இதேவேளை கடந்த சில மாதங்களாக ஏவுகணை சோதனையில் ஈடுபடாத வடகொரியா தற்போது மீண்டும் ஏவுகணை சோதனையில் ஈடுபட்டுள்ளமையானது கொரிய தீபகற்பத்தில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.



# உலக வர்த்தக மையம் தாக்குதல்: கசிந்தது ஆவணம்



வோஷிங்டன்-அமெரிக்காவில் பயங்கரவாதிகளால் நடந்த தாக்குதலின் 20வது ஆண்டு நினைவு தினம் அனுசரிக்கப்படும் நிலையில், தாக்குதல் தொடர்பான ரகசிய ஆவணங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அதில், சவுதி அரேபியாவுக்கு நேரடி தொடர்பு இருப்பது குறித்த எந்த ஆதாரமும் இல்லை. அமெரிக்காவின் நியூயோர்க், வோஷிங்டன் உள்ளிட்ட நகரங்களில் 2001 செப்., 11ல் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் ஈடுபட்ட 19 பேரில், அல் - குவைதா தலைவர் ஒசாமா பின்லேடன் உட்பட 15 பேர் சவுதி அரேபியாவைச் சேர்ந்தவர்கள். அதனால் இந்த தாக்குதலில் சவுதி அரேபிய அரசுக்கு நேரடி தொடர்பு இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

இந்த தாக்குதல் தொடர்பான வழக்கு நீதிமன்றங்களில் நடந்து வருகிறது. தாக்குதல் தொடர்பான ரகசிய ஆவணங்களை அரசு வெளியிட வேண்டும் என, தாக்குதலில் பாதிக்கப்பட்டோரின் குடும்பத்தினர் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். தாக்குதல் தொடர்பான ரகசிய ஆவணங்களை வெளியிடும்படி நீதித்துறை உள்ளிட்ட, தொடர்புடைய துறைகளுக்கு அதிபர் ஜோ பைடன் சமீபத்தில் உத்தரவிட்டிருந்தார்.

# ஆப்கானிஸ்தானின் அதிரடி அறிவிப்பு




ஆப்கானிஸ்தானில் தலிபான் பயங்கரவாதிகள் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியதை அடுத்து பாகிஸ்தான் அரசு அதற்கு பெரும் ஆதரவைத் தெரிவித்து வருகிறது. இதனால் இரண்டு நாடுகளுக்கும் இடையே வர்த்தகம் உட்பட அனைத்து பரிமாற்றங்களுக்கும் ஏற்பாடு செய்யவும் பாகிஸ்தான் முடிவு செய்துள்ளது.

இதனையடுத்து கடந்த சில நாட்களுக்கு முன் பாகிஸ்தான் நிதி மற்றும் வருவாய்த்துறை அமைச்சர் ஷவ்கத்தரின் நிதி தொடர்பான செனட் நிலைக்குழுவிடம். ஆப்கானிஸ்தானுடன் வர்த்தகம் செய்ய தீர்மானிக்கப்பட்டால் பரிமாற்றத்தின்போது பாகிஸ்தான் பணத்தை பயன்படுத்தலாம். இது வெளிநாட்டு பணத்தை சேமிக்கவும். பணத்தை வலுப்படுத்தவும் உதவும். எனக் கூறினார். இதற்கு மறுப்பு தெரிவித்து ஆப்கானிஸ்தான் கலாச்சார ஆணையத்தின் உறுப்பினர் அகமதுல்லா வாசிக். பாகிஸ்தான் பணத்தில் வர்த்தகம் செய்யப்படும் என்ற கருத்தில் எந்த உண்மையும் இல்லை. அண்டை நாடுகளுக்கு இடையேயான பணபரிவர்த்தனம் ஆப்கானிஸ்தானுடையதாகவே இருக்கும். நாட்டு மக்களின் நலனுக்கு தீங்கு விளைவிக்கும் வகையில் எந்த முடிவும் தலிபான் எடுக்காது என அவர் கூறினார்.

சமீபத்தில் ஆப்கானிஸ்தானுக்கு வர்த்தக ரீதியிலான விமானப் போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்யப்படும் என்று பாகிஸ்தான் அறிவித்துள்ள நிலையில் பாக்.. பணத்தில் வர்த்தகம் செய்ய முடியாது என்று ஆப்கானிஸ்தான் முக்கிய நிர்வாகி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.